2016 பிப்ரவரி 18]

கேள்வி வரும் முன்னே அதைக் கட்டிக் கொடுக்க ஆணையிட்ட வாழும் வரலாறு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) கோடானுகோடி நன்றிகளைப் பாதம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். 'மக்களாட்சி, மக்களாட்சி' என்று சொல்லி, தன்னுடைய மக்களுடைய ஆட்சியை நடத்தியதால்தான் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியை மக்கள் நிரந்தரமாக தூக்கி எறிந்தார்கள். கரும்புக் காட்டில் concrete road போட்டு, 'நமக்கு நாமே' என்ற ஒரு பொய்யான பயண நாடகம் நடத்துவது எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் மக்களிடம் எடுபடாது, எடுபடாது. தமிழகத்திலே உள்ள 234 தொகுதிகளையும் வென்றெடுக்கும் மகாசக்தி மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலுள்ள 7 கோடிக்கும் மேற்பட்ட, அனைத்துத் தரப்பு மக்களின் குறைகளை நீக்கி, அனைவருக்கும் தாயாக, தலைவராக, முதல்வராக இருந்து தரணி போற்றும் ஆட்சியை, இன்றைக்கு இந்தியாவிற்கே வழிகாட்டும் முன்மாதிரியான ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கும் ஏழை மக்களுடைய கருணைத்தாய், ஏழைகளின் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றி மலர்களைப் பாதம் பணிந்து சமர்ப்பித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

70—

சமூகக் கூடம்

***51427—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதி, 37—வது வட்டத்திலுள்ள அசோக் லேலண்டு குடியிருப்பு அருகிலும், சாஸ்திரி நகர் 10—வது தெருவிலும் சமூகக் கூடங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2016 பிப்ரவரி 18

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். பெரம்பூர் தொகுதி, 37–வது வட்டம், அசோக் லேலண்டு குடியிருப்பு அருகிலும், சாஸ்திரி நகர் 10–வது தெருவிலும் சமுதாய நலக் கூடங்கள் அமைக்க போதுமான இட வசதி இல்லாத காரணத்தால், அவ்விடங்களில் சமுதாய நலக் கூடங்கள் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பீம்ராவ் அவர்கள்.*

திரு. க. பீம்ராவ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 37–வது வட்டத்தில் அசோக் லேலண்டு குடியிருப்பிற்கு உள்ளே 1 கிரவுண்டுக்கு மேலே இடம் இருக்கிறது. 2014 பிப்ரவரியில் இந்தக் கேள்வி வரும்போது சாஸ்திரி நகரிலே, இடம் இருந்தது; இப்போது அங்கு இடம் இல்லை. எனவே, இப்போது அசோக் லேலண்டு குடியிருப்பில் இருக்கக்கூடிய அந்த இடத்தில் சமூக நலக் கூடம் அமைத்துத் தர வேண்டுமென்று, அங்கு இருக்கக்கூடிய நலச் சங்கங்களும் அந்தப் பகுதி மக்களும் கோரிக்கை வைத்து வருகிறார்கள். அதேபோல, எருக்கஞ்சேரி நெடுஞ்சாலையில் ஏராளமான தனியார் திருமண மண்டபங்கள் இருக்கின்றன. அவற்றின் வாடகை அதிகம் என்பதால், சாதாரண மக்களால் அங்கே சுப நிகழ்ச்சிகள் எதுவும் நடத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அரசு இதை உடனடியாக கவனத்தில் கொண்டு, அசோக் லேலண்டு குடியிருப்பில் ஒரு கிரவுண்டுக்கு மேலே இருக்கக்கூடிய அந்த இடத்தில் சமூக நலக் கூடம் கட்டித் தந்தால், 36–வது வட்டத்திலுள்ள மக்களுக்கு மட்டுமல்ல; சாஸ்திரி நகர் 10–வது தெரு மற்றும் அதைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதிகளிலுள்ள மக்களுக்கும் பேருதவியாக இருக்கும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2016 பிப்ரவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, தமிழகத்திலே 2,267 சமுதாய நலக் கூடங்கள் 328 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளன என்பதை மிகவும் பெருமையோடு இந்த அவையிலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே 161 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கி சமுதாயக் கூடங்கள் அமைக்கப்பட்டன. சென்னையைப் பொறுத்தளவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, 20 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 10 சமுதாய நலக் கூடங்கள் அமைக்கத் திட்டமிடப்பட்டு, 5 சமுதாய நலக் கூடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 சமுதாய நலக் கூடங்கள் கட்டுவதற்கான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. ஆனால், கடந்த தி.மு.க. ஆட்சியிலே சென்னையிலே 1 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 3 சமுதாய நலக் கூடங்கள் மட்டுமே அமைக்கப்பட்டன.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: தற்போது சென்னை மாநகராட்சியிலே 51 சமுதாய நலக் கூடங்கள் உள்ளன. பெரம்பூர் சட்டமன்றத் தொகுதியிலே 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு சமுதாய நலக் கூடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் திறந்துவைக்கப்பட்டுள்ளது. பெரம்பூர் தொகுதி, 37–வது வட்டம், அசோக் லேலண்டு குடியிருப்பு அருகிலும், சாஸ்திரி நகர் 10–வது தெருவிலும் சமுதாய நலக் கூடம் அமைக்க போதுமான இட வசதி இல்லை என்றுதான் அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, அந்த ஒரு ஏக்கர் இடம் அங்கே இருக்கும்பட்சத்தில், அது என்ன இடம்

என்று ஆய்வு செய்து அப்பகுதியிலே சமுதாய நலக் கூடம் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.*

திரு. கு. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 61-வது வட்டத்தில், வீராசாமி தெருவில், சமூக நலக் கூடம் கட்ட அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில்தான், தமிழகத்தில் 2,267 சமுதாய நலக் கூடங்கள் பேரூராட்சி, ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளிலெல்லாம் அமைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற இடத்தில், போதுமான இடம் இருக்கின்றபட்சத்தில், அங்கு சமுதாய நலக் கூடம் அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டுசெல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.*

திருமதி ர. சுபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தம்மம்பட்டி பேரூராட்சி, ஒன்பதாவது வார்டில், ஆதி திராவிட மக்களும் மற்றும் அருந்ததிய மக்களும் அதிகமாக வசிக்கின்றனர்.*

2016 பிப்ரவரி 18]

2011–2012 நிதியாண்டில், சமுதாய நலக் கூடம் கட்டும் பணியை 15 இலட்சம் ரூபாய் செலவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் கொடுத்திருந்தேன். ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பகுதி மக்களுக்கு பயன்படும் வகையில் அந்தச் சமுதாய நலக் கூடத்தை அங்கே அமைக்க சாத்தியக்கூறு இல்லையென்று சொன்னார். ஆனால், இடம் அதிகமாக இருக்கின்றது; நானும் நேரடியாகச் சென்று, அந்த இடத்தைப் பார்த்தேன்; பொது மக்களும் வந்து பார்த்தார்கள். தம்மம்பட்டி பேரூராட்சி, ஒன்பதாவது வார்டு, ஆதி திராவிட மற்றும் அருந்ததிய மக்கள் அதிகமாக வசிக்கின்ற பகுதி என்பதால், அப்பகுதி மக்கள் பயனடைகின்ற வகையில் அங்கே சமுதாய நலக் கூடம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார். சில இடங்களில் இடம் இல்லாத காரணம்கூட இருக்கும். அதேபோல, சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதியை ஒதுக்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடத்தில் பூங்கா அல்லது வேறு இடம் அமைந்து ஏதாவது கிளாரிபிகேஷன் தேவைப்படக்கூடிய சூழ்நிலை இருக்கும் என்று நினைக்கிறேன். சரியான இடமாக, நல்ல இடமாக அது இருந்தால், சமுதாய நலக் கூடம் அமைக்கக்கூடிய வாய்ப்பு இருந்தால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டுசெல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 71, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*